**புகையிரத திணைக்கள நேரம் பேணும் எழுதுவினைஞர் சேவையின் 11 ஆ தரத்தின் உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடைகாண் பரீட்சை (எழுத்து மூலம்) - 2023**

2001 ஆம் ஆண்டு நொவெம்பர் மாதம் 23 ஆம் திகதி பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் , மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சின் தாபன பணிப்பாளரினால் அனுமதிக்கப்பட்டுள்ள இலங்கை புகையிரத திணைக்களத்தின் நேரம் பேணும் எழுதுவினைஞர் சேவையில் ஆட்சேர்ப்பு மற்றும் தரமுயர்த்துதல் திட்டத்திற்கமைய நேரம் பேணும் எழுதுவினைஞர் சேவையின் 11 ஆ தரத்தின் உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடைகாண் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுவதை இத்தால் அறியத்தருகிறேன். அதற்காக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கமைய A4செ.மீ21X29) அளவிலான கடதாசியின் இரண்டு பக்கங்களையும் உபயோகப்படுத்தி தயாரிக்க வேண்டும். குறித்த மாதிரி படிவத்திற்கு ஒவ்வாத , முறையாக நிரப்பப்படாத , குறைபாடுகளுடன் காணப்படும் விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். முறையாக விண்ணப்பத்தை பூர்த்தி செய்யாததினால் ஏற்படும் நட்டத்தினை விண்ணப்பதாரியே பொறுப்பேற்க வேண்டும். விண்ணப்பத்தின் பிரதி நகலினை தன் வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகும். அதன்படி , பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பமானது உப திணைக்கள பிரதானியினால் உறுதிப்படுத்தப்பட்டு குறித்த கெபினட் மூலம் 2024.02.14 திகதியிற்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ புகையிரத பொதுமுகாமையாளர் அலுவலகத்தில் நியமன கிளை 11 இற்கு கிடைக்குமாறு அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்பம் கோரப்படும் இறுதி திகதிக்கு பிறகு கிடைக்க பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்களை பொறுப்பேற்கும் இறுதி திகதி 2024.02.14 ஆகும்.

02. இப் பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படுவதற்கான நடவடிக்கைகள் புகையிரத பொதுமுகாமையாளரினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, அனைத்து விண்ணப்பதாரிகளும் புகையிரத பொதுமுகாமையாளரினால் விதிக்கப்படும் அனைத்து சட்டதிட்டங்களுக்கும் கீழ்படிய வேண்டும். அச் சட்டதிட்டங்களை மீறினால் புகையிரத பொதுமுகாமையாளரினால் நியமிக்கப்படும் தண்டனைக்கு கீழ்படிய வேண்டி நேரிடும்.

03. விண்ணப்பிப்பதற்கான தகைமைகள் - விண்ணப்பத்தை பொறுப்பேற்கும் இறுதி திகதிக்கு நேர எழுதவினைஞர் சேவையின் 11 ஆ தரத்தின் உத்தியோகத்தர்கள் இந்த பரீட்சைக்கு தோற்ற தகைமையுடையவர்களாவர்.

04. அனைத்து விண்ணப்பதாரர்களும் வினைத்திறன் தடைகாண் பரீட்சையின்போது தமது ஆளடையாளத்தை நிரூபிப்பது அவசியமாகும். அதன் தொடர்பில் கீழ்வரும் ஏதேனும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

I. தேசிய அடையாள அட்டை
II. செல்லுபடியான கடவுச்சீட்டு
III. செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்

CamScanner

05.விண்ணப்பத்தை பூர்த்தி செய்கையில் மிகவும் கவனமாகவும் சரியான தகவல்களையும் வழங்க வேண்டும். விண்ணப்பதாரியினால் வழங்கப்படும் ஏதேனுமொரு தகவல் பொய்யானது என தெரிய வரும் பட்சத்தில் விண்ணப்பதாரி மற்றும் விண்ணப்பத்தை உறுதிபடுத்தும் உத்தியோகத்தர் அது தொடர்பில் பொறுப்பேற்க வேண்டும்.

06. விண்ணப்பத்தினை பொறுப்பேற்கும் இறுதி தினத்திற்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணங்களை சமர்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு புகையிரத பொதுமுகாமையாளரினால் அனுமதி பத்திரங்கள் வழங்கப்படும். பரீட்சைக்கு தோற்றும் திகதியில் பரீட்சை நிலையாதிபதியிடம் தமது கையொப்பம் உறுதி செய்யப்பட்டுள்ள அனுமதி பத்திரத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

07. புகையிரத பொது முகாமையாளரினால் வழங்கப்பட்ட அனுமதி பத்திரத்தை கொண்ட உத்தியோகத்தர்களுக்கு பரீட்சைக்கு தோற்றுவதற்கு ஏதுவாக உப திணைக்கள தலைவர்களால் கடமை விடுமுறை வழங்கப்பட வேண்டும். போக்குவரத்து கட்டணம் வழங்கப்பட மாட்டாது.

08. இப் பரீட்சையானது சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் மாத்திரம் நடாத்தப்படும். விண்ணப்பங்களை சமர்பித்ததன் பின்னர் எவ்வித காரணத்தை கொண்டும் விண்ணப்பித்த மொழி மூலத்தினை மாற்றியமைக்க வாய்பளிக்கப்பட மாட்டாது.

09. தேர்ச்சி பெறுவதற்கு குறைந்த பட்சம் நூற்றுக்கு நாற்பது(40%) புள்ளி வீதத்தனை பெறவேண்டும்.

10.தேர்வு நடைமுறை - விண்ணப்பதாரிகள் கீழ்வரும் பாடங்களை உள்ளடக்கிய எழுத்து மூல பரீட்சைக்கு தோற்ற வேண்டும்

| **பாடம்** | **புள்ளி** | **காலம்** | **பாட இலக்கம்** | **தேர்ச்சி புள்ளி** |
|---|---|---|---|---|
| **அலுவலக முறைமை பற்றிய அறிவு** | 100 | 1½ **மணித்தியாலங்கள்** | 01 | 40 |

10.1 பாட விதந்துரை

| |
|---|
| வினாத்தாளிலேயே விடையளிக்க வேண்டிய பல்வினா மாதிரியிலான வினாப்பத்திரமாகும். தொழிற்சாலை மற்றும் வெளிக்கள கனிஷ்ட சேவை மற்றும் கீழ் உத்தியோகத்தர்களின் விடுமுறை உரிமைகள், கடமை நேரங்கள்,வெளி சேவைகள், மேலதிக கொடுப்பனவுகள், இலவச புகையிரத போக்குவரத்து உரிமை மற்றும் வழங்கல், விடுமுறை தொடர்பான ஆவணங்களை பேணல்,அனுமதியின்றி சமூகமளிக்காமை,பட்டியலிடப்பட்ட பொருட்கள், அலுவலக ஆவணங்கள், புகையிரத திணைக்களத்தில் ஒவ்ஒவ் உப திணைக்களங்களுக்கான கடமைப்பாடுகள் |

CS CamScanner

11. இப் பரீட்சைக்கான பரீட்சை பெறுபேறுகள் புகையிரத பொதுமுகாமையாளரினால் வெளியிடப்படும்.

12. இப் பரீட்சை அறிவித்தலில் ஏற்பாடுகள் செய்யப்படாத எந்த ஒரு விடயம் தொடர்பிலும் , புகையிரத பொதுமுகாமையாளரின் தீர்மானமே இறுதி தீர்மானமாகும்.

13. சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் பிரசுரிக்கப்படும் இவ் அறிவித்தலில் மொழிகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படுவதாக தோன்றுமிடத்து அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**எச்.எம்.கே.டபிள்யூ.பண்டார**
**புகையிரத பொதுமுகாமையாளர்**

..............................ஆம் திகதி,
தபெ.இல.355,.
கொழும்பு 10.
புகையிரத பொதுமுகாமையாளர் காரியாலயத்தில்,